Australian Government
Attorney-General's Department

மே 2020

# நீதி மன்றத்திற்குச் செல்லுதல்

'ஆஸ்திரேலிய உச்ச நீதி மன்றம்', 'ஆஸ்திரேலிய ஃபெடரல் நீதிமன்றம்', 'ஆஸ்திரேலியக் குடும்ப நீதிமன்றம்' மற்றும் 'ஆஸ்திரேலிய ஃபெடரல் சர்க்யூட் நீதிமன்றம்' ஆகியன 'கோவிட்-19' நோய்த்தொற்றுக் காலத்திலும் இயங்கிக்கொண்டுதான் இருக்கின்றன.

பொதுமக்களை நேருக்கு நேர் பார்த்து சேவை அளிக்கும் 'கவுண்ட்டர்கள்' (counters) அனைத்தையும் இந்த நீதிமன்றங்கள் மூடியிருந்தாலும், தற்போதைய வழக்கு விசாரணைகள் நீதிமன்றத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை ஒவ்வொரு நீதிமன்றமும் செய்துள்ளது. அவசரமான சூழ்நிலைகளில், தொலைபேசி வாயிலான ஆரம்ப கட்ட மதிப்பீடு ஒன்று செயப்பட்ட பிறகு 'நேருக்கு நேர்' சேவைகள் அளிக்கப்படக்கூடும்.

மிகச் சமீபத்திய தகவல்களுக்கும் புதுச் செய்திகளுக்கும், தக்க நீதிமன்றத்தினது வலைத்தலத்தினைப் பாருங்கள், அல்லது பின் வரும் தொடர்பு விபரங்களைப் பயன்படுத்துங்கள்:

- High Court of Australia அல்லது 02 6270 6811
- Federal Court of Australia அல்லது 1300 720 980
- Family Court of Australia அல்லது 1300 352 000
- Federal Circuit Court of Australia அல்லது 1300 720 980

'நிர்வாக முறையீட்டு மன்ற'(Administrative Appeals Tribunal)த்தின் உள்ளூர்ப் பகுதிப் பதிவகங்கள் தற்போது மூடப்பட்டிருந்தாலும், இந்த மன்றம் இப்போதும் இயங்கிகொண்டுதான் இருக்கிறது. மேலதிகத் தகவல்களுக்கு மன்றத்தின் website - இனைப் பாருங்கள் அல்லது 1800 228 333-ஐ அழையுங்கள்.